2014 ஆகஸ்ட் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

12. ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்யும்வகையிலும், ஊரகப் பகுதிகளில் சிறிய அளவில் விவசாய நிலங்களை வைத்திருக்கும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, சிறு மற்றும் குறு விவசாயிகளின் கூடுதல் வருவாய்க்கு வழி ஏற்படுத்தித் தரும் வகையிலும், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து 4,000 ஏக்கர் நிலப் பரப்பில் மரக் கன்றுகள் மற்றும் பழக் கன்றுகள் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன்மூலம் 62 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் 37.54 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

13. விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைப் பாதுகாக்க போதிய சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தும் வகையில் 2014-2015 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள 385 வட்டாரங்களில் ஒரு வட்டாரத்திற்கு ஒரு உணவு தானிய சேமிப்புக் கிடங்கு என்ற விகிதத்தில் 385 உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் தலா 8 இலட்சம் ரூபாய் வீதத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) 30 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம் பெறவும் அதன்மூலம் தமிழ்நாடு பல வகைகளில் முன்னேற்றம் அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பு நிறுவுதல், புதிய குடிநீர், வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள், அம்மா மக்கள் சேவை மையங்கள், ஊரக வளர்ச்சித் துறையில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு 110 விதியின்கீழ்*

பல்லாயிரம் கோடிக்கணக்கான ரூபாய் நிதிகளை ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பெண்கள், குறிப்பாக தமிழகத்திலுள்ள பெண்கள் வரலெஷ்மி விரதம் நோன்பு இருந்து மகாலெஷ்மி தங்கள் வீட்டிற்கு வர வேண்டுமென்று பிரார்த்தனையும், பூஜையும் செய்து வருகின்றார்கள். செல்வம் நிரந்தரமாக தன் வீட்டில் இருக்க வேண்டுமென்று வழிபாடு செய்வார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகின்ற அனைத்துத் திட்டங்கள் மூலமாகவும் தமிழக மக்களின் ஒவ்வொருவர் வீட்டிலும் மகாலெஷ்மியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனக்கென்று எதையும் வைத்துக்கொள்வதில்லை. தன்னகத்தே உள்ள ஓயாத உழைப்பு, அறிவுச்செல்வம், நேர்மை, தைரியம், ஈகை, அன்பு, அறம், அரவணைப்பு, சுறுசுறுப்பு இவை அத்தனையும் ஒன்றாக இணைத்து, திட்டங்களாக வடிவமைத்து, தமிழக மக்களின் மகாலெஷ்மியாய் இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களின் தாயாக விளங்கக்கூடிய அம்மா அவர்கள், நீங்கள் நீடூழி வாழ வேண்டும் இறைவா என்று வேண்டுகின்றோம். இங்கு மட்டுமல்ல இந்தியத் திருநாட்டின் மகாலெஷ்மியாக, வழிகாட்டியாக மாண்புமிகு அம்மா அவர்கள் வரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து, எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

4. கவன ஈர்ப்பு

மாவட்ட காசநோய் மையங்களில் போதிய மருந்துகள் இருப்பு இல்லாமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.